# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 3 | 4 Pages | 30.7.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 3 | 4 பக்கங்கள் | 30.7.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# திருநங்கை சந்தியா தேவிக்கு விருது: முதல்வர் வழங்கினார்




சென்னை, ஜூலை 30

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருநங்கையர்களின் நலன் காக்க அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள்:

மூன்றாம் பாலினத்தவர் என்ற பெயருக்கு மாற்றாக அவர்களின்சுயமரியாதையை காக்கும் வகையில் திருநங்கை" என்ற பெயரினை முத்தமிழறிஞர் கலைஞர் அறிமுகப்படுத்தினார். திருநங்கைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார ஆதரவை வழங்கி அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்திட 2008ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தை தோற்றுவித்தார்.

அந்நலவாரியத்தின் வாயிலாக அவர்களுக்கு உயர்கல்விக்கான உதவித் தொகை. தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சுயதொழில் புரிந்திட மானியம். 40வயதிற்குமேற்பட்டஆதரவற்ற திருநங்கைகளுக்கு ரூ.1,500/ மாதாந்திர ஓய்வூதியத் தொகை, திருநங்கைகள் உயர்கல்வி பயின்றிட கல்வி கனவுத் திட்டம் போன்றபல்வேறுநலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திமுக அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை 9,080 திருநங்கைகளுக்கு நல வாரியத்தின் மூலமாக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள தோடு, 617 திருநங்கைகளுக்கு சுயதொழில் புரிய மானியமும், 1,599 ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதாந்திர ஓய்வூதியமும், கட்டணமில்லா பேருந்து பயண திட்டமான விடியல் பயணத் திட்டத்தில் திருநங்கைகள் 29.74 லட்சம் கட்டணமில்லா பஸ் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

சிறந்த திருநங்கை விருது:

திருநங்கைகளின் நலனிற்காக சிறப்பான முறையில் சேவைபுரிந்து, அவர்களுள் முன்மாதிரியாக திகழும் திருநங்கை ஒருவர். மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவால் தேர்வு செய்யப்பட்டு. ஒவ்வோர் ஆண்டும்திருநங்கைகள்தினமான ஏப்ரல் 15ம் நாளில் அவர்களை சிறப்பிக்கும் பொருட்டு, சிறந்த திருநங்கை விருது கடந்த 2021ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கு தேர்ந்தெடுக்கப்படும் திருநங்கைக்கு 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையைச் சேர்ந்த திருநங்கை சந்தியா தேவி பூ கட்டும் தொழில் செய்து தன் வாழ்க்கையை நடத்தி வருகிறார். வில்லிசையில் ஆர்வம் ஏற்பட்டு புராணக் கதைகளை படித்து தன் தனித்திறமையால் 1000க்கும் மேற்பட்ட வில்லிசை நிகழ்ச்சிகளை தமிழ்நாடு மற்றும் கேரளாவில் நடத்தியுள்ளார். வில்லிசை நிகழ்ச்சி மூலம் கொரோனா விழிப்புணர்வு, சமூக நலத் திட்டங்கள், வரதட்சணை தடுப்பு, பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

பலதிருநங்கைகளுக்குஅவர்கள் சுயமாக வருமானம் ஈட்டும் வகையில் வில்லிசையை கற்றுக் கொடுத்து கிராமிய கலைகளில் ஈடுபட உதவி வருகிறார். தோவாளையைச் சார்ந்த 9ம் வகுப்பு படிக்கும் ஒரு ஏழை சிறுவனின் படிப்பிற்கான அனைத்து செலவுகளையும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதோடு. 8 வயது மனவளர்ச்சி குன்றிய ஒரு குழந்தையை தத்தெடுத்து பராமரித்து வருகிறார்.

இவ்வாறு, திருநங்கைகள் சமூகத்திற்கு முன்மாதிரியாக திகழ்ந்து, திருநங்கைகளின் முன்னேற்றத்திற்காக வில்லிசையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி சேவை புரிந்து வரும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை சந்தியா தேவி 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதிற்கு தேர்வு செய்யப்பட்டார். அவரது சேவையைப்பாராட்டிதிருநங்கை சந்தியாதேவிக்குசிறந்ததிருநங்கை விருது, ரூ.1 லட்சம் காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிழை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும்மகளிர்உரிமைத்அமைச்சர் கீதாஜீவன்,தலைமைச்செயலாளர் துறை திரு. சிவ்தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பெண் அதிகாரியின் நெற்றியில் குங்குமம் வைத்த காங்கிரஸ் எம்.பி.யால் சர்ச்சை



பெங்களூரு, ஜூலை 30

கர்நாடக மாநிலம் மைசூருவில் உள்ள பிரசித்திபெற்ற சாமுண்டீஸ்வரி அம்மன் கோவிலுக்கு சாம்ராஜ்நகர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில்போஸ் வந்தார். அவருடன் சுற்றுலா துறை இணை இயக்குனர் சவிதா மற்றும் அதிகாரிகள் பலர் வந்தனர். அவர்கள் இருவரும் சாமுண்டீஸ்வரி அம்மனை தரிசித்தனர்.

பின்னர் சாமுண்டீஸ்வரி அம்மன் சன்னதி முன்பு சுனில் போஸ் எம்.பி., அதிகாரி சவிதாவின் நெற்றியில் குங்குமம் வைத்தார். அவர் அதிகாரி சவிதாவுக்கு குங்குமம் வைத்த விதம் பலரின் புருவத்தையும் உயர்த்தியது. அதாவது சவிதாவின் மீது அளவுக்கு அதிகமான உரிமை உள்ளதுபோல் தெரிந்தது.

தேர்தலின்போதுசுனில்போஸ்தனக்குஇன்னும்திருமணம்ஆகவில்லை என்று தன்னுடைய பிரமாண பத்திரத்தில் தெரிவித்து இருந்தார். ஆனால் அப்போது அவர், அதிகாரி சவிதாவுடன் இருக்கும் புகைப்படத்தை தேர்தல் அதிகாரியிடம் ஆதாரமாக கொடுத்து, சுனில் போசுக்கு திருமணமாகி விட்டதாக பா.ஜனதாவினர் தெரிவித்தனர். ஆனால் அதை சுனில்போஸ் மறுத்தார்.

தற்போதுஅவர்சாமுண்டீஸ்வரிஅம்மன்கோவிலில்அதிகாரிசவிதாவின் நெற்றியில் குங்குமம் வைத்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதுதொடர்பான புகைப்படங்களும், வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

## காதலை கைவிட்டதால் ஆத்திரம்... பெற்றோர் கண்ணெதிரே இளம்பெண்ணுக்கு கத்திக்குத்து

பெங்களூரு, ஜூலை 30

கர்நாடக மாநிலம் துமகூரு மாவட்டம் கொரட்டகெரேயை சேர்ந்தவர் பவ்யா (வயது 25). இவர், கடந்த 5 ஆண்டுகளாக பெங்களூரு புறநகர் மாவட்டம் தொட்டபள்ளாப்புராவில் உள்ள ஆயத்த ஆடை நிறுவனத்தில் வேலை செய்தார். அப்போது அவருக்கும், ராமாச்சாரி என்ற வாலிபருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் அவர்களுக்குள் காதலாக மாறியது. இவர்களது காதல் விவகாரம் பவ்யாவின் பெற்றோருக்கு தெரியவந்தது. உடனே ராமாச்சாரியுடன் உள்ள காதலை கைவிடும்படி பவ்யாவிடம் பெற்றோர் கூறியுள்ளனர். இதனால் ராமாச்சாரியுடன், பவ்யா, பேசுவதை நிறுத்தி விட்டதாக கூறப்படுகிறது. ஆயத்த ஆடை நிறுவனத்திற்கும் அவர் வேலைக்கு செல்லாமல் இருந்ததாக தெரிகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு கொரட்டகெரேயில் உள்ள பவ்யாவின் வீட்டுக்கு ராமாச்சாரி சென்றுள்ளார். அங்கு வைத்து பெற்றோர் முன்னிலையிலேயே பவ்யாவிடம் தகராறில் ஈடுபட்டார். பின்னர் பெற்றோர் கண்எதிரேயே பவ்யாவை தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் சரமாரியாக குத்தினார். உடனே ராமாச்சாரியிடம் இருந்து பவ்யாவை, அவரது பெற்றோர் மீட்டனர். பின்னர் உயிருக்கு போராடி கொண்டிருந்த பவ்யாவை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு பவ்யாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், ராமாச்சாரியும் தனது கையை கத்தியால் அறுத்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். அவருக்கும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் தகவல் அறிந்து வந்த போலீசார், ராமாச்சாரியை கைது செய்தனர். அவர் குணமடைந்ததும் விசாரணை நடத்தப்படும் என போலீசார் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து கொரட்டகெரே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவத்தால் கொரட்டகெரேவில் பரபரப்பு ஏற்பட்டது.

## காஷ்மீர் எல்லையில் பாதுகாப்பு படையினர் உஷார் நிலை



ஜம்மு, ஜூலை 30

காஷ்மீரில் சமீப நாட்களாக பயங்கரவாத தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து உள்ளன. குறிப்பாக ஜம்மு பிராந்தியத்தில் கடந்த 50 நாட்களில் மட்டும் 15 தாக்குதல்கள் நடந்துள்ளன. இதில் 2 அதிகாரிகள் உள்பட 10 பாதுகாப்பு படை வீரர்கள் பலியாகி உள்ளனர்.

இதைப்போல 9 புனித யாத்திரை பக்தர்களும் உயிரிழந்து உள்ளனர். மேலும் 58 பேர் காயம் அடைந்தனர். இதனால் காஷ்மீரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. இப்படி அடுத்தடுத்து தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்து வருவது நாடு முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த நிலையில் காஷ்மீரின் எல்லையோர மாவட்டங்களில் ஒன்றான பூஞ்சின், சலோத்ரிமங்க்னார் பகுதிக்கு அருகே எல்லைக் கட்டுப்பாட்டுக்கோடு பகுதியில் மர்ம நபர்களின் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு உளவுத்தகவல் கிடைத்தன.

இதைத்தொடர்ந்து நேற்று அதிகாலை முதல் அந்த பகுதியை சல்லடை போட்டு பாதுகாப்பு படையினர் தேடினர். ராணுவம், சி.ஆர்.பி.எப். மற்றும் சிறப்பு நடவடிக்கைக்குழு என பல்வேறு துறைகளை சேர்ந்த பாதுகாப்பு படையினர் இந்த பணிகளை மேற்கொண்டனர். இந்த தேடுதல் வேட்டை மாலையிலும் நீடித்ததாக கடைசியாக கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதைப்போல ரியாசி மாவட்டத்தின் போனி அருகே உள்ள தடோயா பகுதியில் 2 மர்ம நபர்களை பார்த்ததாக பெண் ஒருவர் பாதுகாப்பு படையினருக்கு தகவல் கொடுத்தார். உடனே போலீசாரும், பாதுகாப்பு படையினரும் சேர்ந்து அந்த பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்த பணிகளும் நீடித்து வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இந்த 2 சம்பவங்களை தொடர்ந்து காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் கடும் உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர். மேலும் தங்கள் பகுதிகளில் மர்ம நபர்களின் நடமாட்டம் இருப்பது தெரிந்தால் உடனே பாதுகாப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்குமாறு மக்களும் கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர்.

மர்ம நபர்களின் நடமாட்டம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதால் காஷ்மீர் எல்லைமுழுவதும்பெரும்பதற்றம்நீடித்துவருகிறது.ஜம்முபிராந்தியத்தில் கடந்த 2 வாரங்களில் இதுபோன்ற பல தேடுதல் வேட்டை நிகழ்வுகள் நடந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வாலாஜா திருப்பெரும்புதூர் நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை தேவை: ராமதாஸ்



சென்னை, ஜூலை 30

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னைபெங்களூர் தேசிய நெடுஞ்சாலையின், திருப்பெரும்புதூர், வாலாஜா இடையிலான பகுதியை 6 வழிச்சாலையாக மாற்றுவதற்கான பணிகள் ஏற்கனவே பல ஆண்டுகள் தாமதமடைந்துள்ள நிலையில், திருப்பெரும்புதூர், காரைப்பேட்டை இடையே சாலை விரிவாக்கப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. இதனால், திருப்பெரும்புதூர், வாலாஜா சாலைப் பணிகள் மேலும் தாமதமடையக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

சென்னை, பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை 6 வழிச்சாலையாக அமைக்கப்பட்ட நிலையில், சென்னை மதுரவாயல் முதல் வாலாஜா வரையிலான 93 கி.மீ நீளச் சாலை 4 வழிப்பாதையாகவும், அதிக விபத்துகள் நிகழும் சாலையாகவும் உள்ளது. இது தொடர்பாக பல அறிக்கைகளை வெளியிட்டதுடன், மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்களாக இருந்தவர்களுக்கு தொடர்ந்து கடிதங்களையும் எழுதினேன். அதன்பயனாக இச்சாலையை 6 வழிச்சாலையாக விரிவாக்கும் திட்டம் 2014ம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் விடப்பட்டு 2018ம் ஆண்டின் இறுதியில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன.

அடுத்த 3 ஆண்டுகளில் இந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, 2021ம் ஆண்டில் போக்குவரத்துக்கு சாலை திறக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 6 ஆண்டுகள் நிறைவடைந்தும் கூட பணிகள் இன்னும் முடிவடையவில்லை. மொத்தம் 98 கி.மீ. நீள சாலையில், தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைத்துறையால் மேற்கொள்ளப்பட்ட மதுரவாயல் முதல் திருப்பெரும்புதூர் வரையிலான23கி.மீநீளசாலைவிரிவாக்கப் பணிகள் முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள 70 கி.மீ நீள சாலையில், காரைப்பேட்டை முதல் வாலாஜா வரையிலான 36 கி.மீ நீளத்திற்கான பணிகள் 75% நிறைவடைந்து விட்டன. மீதமுள்ள பணிகளும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நிறைவடைந்துவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், காரைப்பேட்டை & திருப்பெரும்புதூர் இடையிலான பணிகள் இதுவரை 57% மட்டுமே நிறைவடைந்திருக்கும் சூழலில் தான் சாலை விரிவாக்கப்பணிகள் ஒப்பந்ததாரரால் முன்னறிவிப்பின்றி கைவிடப்பட்டிருக்கின்றன.

நெடுஞ்சாலை கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான நிலக்கரி சாம்பல் இலவசமாக கிடைக்காதது தான் திட்டப்பணிகள் கைவிடப்பட்டதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. நாடு முழுவதும் உள்ள நிலக்கரி சுரங்கங்களில் இருந்து வெளியேற்றப்படும் நிலக்கரி சாம்பலில் 20 விழுக்காட்டை இலவசமாக வழங்க வேண்டும் என்று மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணை, 2022ம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது. அதன்பின் 6% நிலக்கரி சாம்பலை இலவசமாக வழங்க வேண்டும் என்று தமிழக அரசு பிறப்பித்த ஆணையும் முறையாக செயல்படுத்தப்படவில்லை. இதனால், நிலக்கரி சாம்பலை விலை கொடுத்து வாங்கி பயன்படுத்தினால் திட்டச் செலவு அதிகரித்து விடும் என்பதால் தான், திட்டப்பணிகளை ஒப்பந்ததாரர் திடீரென கைவிட்டு விட்டதாக கூறப்படுகிறது. இதனால் பாதிக்கப்படுவது அப்பாவி பொதுமக்கள் தான்.

காரைப்பேட்டை, திருப்பெரும்புதூர் இடையிலான பணிகள் ஏற்கனவே தாமதமாக நடைபெற்று வருகின்றன. திட்டப் பணிகள் நிறுத்தப்பட்டு விட்ட நிலையில், அதற்கான புதிய ஒப்பந்தத்தை கோரி, நிறைவு செய்வதற்கு இன்னும் 4 முதல் 5 மாதங்கள் ஆகலாம். அதன்பிறகு பணிகள் தொடங்கப்பட்டால் கூட, அப்பணிகள் நிறைவடைய குறைந்தது இன்னும் 2 ஆண்டுகளுக்கு மேலாகும் என்று கூறப்படுகிறது. 2021ம் ஆண்டில் நிறைவடைந்திருக்க வேண்டிய பணிகள், 2024ம் ஆண்டை கடந்தும் கன்னித்தீவு கதையைப் போல் அனுமதிக்க முடியாது. சாலைப் பணிகள் தாமதமாவதால் சாலை விபத்துகள் அதிகரித்து வருகின்றன.

வாலாஜா, திருப்பெரும்புதூர் இடையிலான சாலை விரிவாக்கப் பணிகள் தொடங்கிய பிறகு 2019ம் ஆண்டு ஏப்ரல் முதல் 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான மூன்றரை ஆண்டுகளில், அதாவது 1277 நாட்களில் இந்த பகுதியில் மொத்தம் 786 விபத்துகள் நிகழ்ந்துள்ளன. அதாவது ஒன்றரை நாட்களுக்கு ஒரு விபத்து நிகழ்ந்திருக்கிறது. இந்த விபத்துகளில் 79 பேர் உயிரிழந்துள்ளனர்; 761 பேர் படுகாயமடைந்து உயிர் பிழைத்துள்ளனர். 2022ம் ஆண்டுக்கு பிந்தைய புள்ளிவிவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் விபத்து அதிகரித்துள்ளதாக தெரிகிறது.

வாலாஜா திருப்பெரும்புதூர் நெடுஞ்சாலைவிரிவாக்கப்பணிகள் தாமதமடைந்து வருவதற்கு சென்னை ஐகோர்ட்டு கடுமையான கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறது.முழுமையானசுங்கக்கட்டணம் வசூலிக்கவும் தடை விதித்தது. அதன்பிறகும் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமும், ஒப்பந்ததாரர்களும் பாடம் கற்றுக் கொள்ளாதது வருத்தமளிக்கிறது. தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமும், தமிழ்நாடு அரசும் இந்தத் திட்டப்பணிகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களை அழைத்துப் பேசி சாலை விரிவாக்கப் பணிகளை விரைவுபடுத்தி, அதிகபட்சமாக அடுத்த 6 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என ஆணை பிறப்பிக்க வேண்டும். அதுவரை அந்த சாலையில் சுங்கக்கட்டணம் வசூலிப்பதையும் நிறுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மீண்டும் வளர்ச்சிப்பாதையில் ரயில்வே துறை பங்குகள்.. கேட்கவே இனிமையா இருக்கே

டெல்லி, ஜூலை 30

இந்தியாவில் ரயில்வே துறை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் முதலீட்டாளர்களுக்கு கணிசமான லாபத்தை ஈட்டி தந்துள்ளன. அந்த வகையில் ரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் நிறுவனத்தின் பங்கு மும்பை பங்குச்சந்தையில்ஜூலை 29ஆம் தேதி ஒரே நாளில் சுமார் 4 சதவீதம் வரை உயர்ந்தது. ஐஆர்எப்சி பங்கும் 3.65 சதவீதம் உயர்ந்தது. டிடாகர் ரயில் சிஸ்டம் நிறுவனத்தின் பங்கு 4.4% சதவீதம் என உயர்ந்து வர்த்தகமானது.

கடந்த வாரம் பட்ஜெட் அறிவிப்புக்கு பின்னர் ரயில்வே துறை சார்ந்த பொது நிறுவன பங்குகளின் மதிப்பு சற்றே குறைந்தது. இந்த நிலையில் நடப்பு வாரத்தின் முதல் வர்த்தக நாளில் இந்த பங்குகள் மீண்டு வந்துள்ளன. கடந்த ஐந்து வர்த்தக நாட்களில் ரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் மற்றும் ஐஆர்எஃப்சி நிறுவனங்களின் பங்குகள் கிட்டதட்ட 8 சதவீதம் சரிவடைந்தன. இருந்தாலும் இந்த பங்குகள் அனைத்தும் மீண்டும் வளர்ச்சி பாதைக்கு திரும்பி இருப்பது முதலீட்டாள ர்களுக்கு நம்பிக்கையை அளித்துள்ளது.

மீண்டும் வளர்ச்சிப்பாதையில் ரயில்வே துறை பங்குகள்.. கேட்கவே இனிமையா இருக்கே..!

த்திய அரசு தொடர்ந்து ரயில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருவதால் ரயில்வே துறை சார்ந்த பங்குகளை நம்பி முதலீடு செய்யலாம் என நிபுணர்கள்கூறுகின்றனர். பட்ஜெட்டில்நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மூலதன செலவினங்களுக்காக 2.62 லட்சம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார்.

ரயில்வே துறையை நவீனப்படுத்துவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது என அண்மையில் ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். குறிப்பாக ரயில்வே துறையை பாதுகாப்பானதாக மாற்றுவதில் அரசு மிக தீவிரமாக இருக்கிறது என கூறும் அவர் இதற்காக நடப்பாண்டில் சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாயை செலவு செய்ய இருப்பதாககூறியுள்ளார். மேலும் தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்புக்காக 1112 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதையும்அவர்சுட்டிக்காட்டுகிறார். எனவேரயில்வே துறை சார்ந்த பங்குகள் அடுத்து வரும் நாட்களிலும் வளர்ச்சி பாதையில் தான் இருக்கும் என நிபுணர்கள் கணிக்கின்றனர். பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் இந்த பங்குகளின் மீதும் கவனம் செலுத்தலாம் என்ற பரிந்துரையையும் முன் வைக்கின்றனர். கடந்த ஓராண்டு காலத்தில் பெரும்பாலான ரயில்வே துறை சார்ந்த நிறுவனங்களின் பங்குகள் சுமார் 200% க்கும் மேல் வளர்ச்சி அடைந்துள்ளன. இந்த டிரெண்ட் அப்படியே நீடிக்கும் என்பது தான் பங்குச்சந்தை நிபுணர்களின் கணிப்பு ஆகும்.

# தனியார் மருத்துவமனைகளிலும் குழந்தைகளுக்கு இலவச தடுப்பூசி தமிழக அரசு



சென்னை, ஜூலை 30

குழந்தை பிறந்த முதல் மாதத்தில் இருந்து 18 வயது வரை செலுத்தப்படும் 16 தடுப்பூசிகளை, குறிப்பிட்ட சில தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக பெற்றுக் கொள்ளும் திட்டம் விரைவில் தொடங்க உள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பேசிய சுகாதாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம்,, "தனியாரை பொறுத்தவரை தற்போது ஒரு அரசாணையை பிறப்பித்துள்ளோம். அதன்படி, குறிப்பிட்ட சில மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு இலவசமாக தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்கு சில வழிகாட்டு நெறிமுறைகள் இருக்கின்றன. தனியார் மருத்துவமனைகள் தடுப்பூசியை சரியானமுறையில்பாதுகாக்க வேண்டும். அதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் இருக்க வேண்டும். இவற்றுடன் பொதுமக்களிடம் இருந்து எந்த வித கட்டணமும் வசூலிக்க மாட்டோம் என்று உறுதி அளித்தால் அதன் அடிப்படையில் சில மையங்கள்திறக்கப்படும். விரைவில் அறிவிப்புகள் வெளியாகும். முதல்அமைச்சரின் காப்பீட்டு திட்டத்தை போல இதில் பயன்பெற முடியும்" என்று அவர் கூறினார்.

# ஆடி கிருத்திகை விழா.. முருகன் கோவில்களில் குவிந்த பக்தர்கள்




சென்னை, ஜூலை 30

பால் குடம் எடுத்தும், அலகு குத்தியும், காவடி எடுத்தும் ஏராளமான பக்தர்கள் ஊர்வலமாக வந்து தங்களதுநேர்த்திக்கடனை செலுத்தி வருகின்றனர்.

ஆடி கிருத்திகையை முன்னிட்டு முருகன் கோவில்களில் இன்று அதிகாலையில் நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அதிகாலை முதலே பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று முருகனைதரிசனம் செய்துவருகின்றனர்.

அறுபடை வீடுகளில் 5ம் படை வீடான திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சாமி கோவிலில் இன்று ஆடிக்கிருத்திகை மற்றும் தெப்பத்திருவிழா நடக்கிறது. ஆடி கிருத்திகையை முன்னிட்டு இன்று அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டு முருகருக்கு பல்வேறு சிறப்பு அபிஷேகங்கள் நடத்தப்பட்டன. அதன்பின் தங்க கவசம், வைர கிரீடம் பச்சைக்கல் மரகத மாலை அணிவிக்கப்பட்டு தீபாராதனை நடைபெற்றது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, உள்ளிட்ட பல்வேறு மாவட்டம் மற்றும் பாண்டிச்சேரி, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள், பால் காவடி, மலர் காவடி, பன்னீர் காவடி, மயில் காவடி எடுத்து வந்து முருகனுக்கு நேர்த்திக் கடன் செலுத்தி வருகின்றனர்.

மாலையில் தெப்பத்திருவிழா (முதல் நாள் தெப்பம்) நடைபெறுகிறது. நாளை இரண்டாம் நாள் தெப்பம், 31ம் தேதி மூன்றாம் நாள் தெப்பம் நடக்கிறது. இந்த 3 நாட்கள் தெப்ப உற்சவத்தில் முருகர், வள்ளி, தெய்வானையுடன் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளிக்கின்றனர்.

சுவாமி மலை முருகன் கோவிலில் தங்க கவசம், வைரவேல் அலங்காரத்தில் காட்சியளித்த சுவாமிநாதரை அதிகாலை முதலே பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்கின்றனர். இன்று மாலை தெப்பத்திருவிழா நடைபெறுகிறது.

சென்னை வடபழனி முருகன் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. இன்று அதிகாலை 3மணி அளவில் கோவில் நடை திறக்கப்பட்டு பின்னர் பள்ளியறை பூஜை முடிந்து முருகனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடந்தது. இதையடுத்து அதிகாலை 5 மணி முதல் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டு நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இன்று இரவு 11 மணி வரை முருகனை தரிசிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நண்பகல் 12 மணி வரை சந்தனகாப்பு அலங்காரத்திலும், அதைத்தொடர்ந்து மாலை 4 மணி வரை ராஜ அலங்காரமும், பின்னர் இரவு 11 மணி வரைபுஷ்ப அங்கி அலங்காரத்துடனும் முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

வடபழனி, விருகம்பாக்கம், சாலிகிராமம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து பால் குடம் எடுத்தும், அலகு குத்தியும், காவடி எடுத்தும் ஏராளமான பக்தர்கள் ஊர்வலமாக வந்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தி வருகின்றனர். பக்தர்கள் நெரிசல் இன்றி சாமி தரிசனம் செய்யும் வகையில் ஆங்காங்கே குடி தண்ணீர் வசதி, முதியோர், கைக்குழந்தையுடன் வருபவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு தனி வரிசை என பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் கோவில் வளாகத்தை சுற்றியும் கோவிலுக்கு செல்லும் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை கட்டுப்படுத்தும் விதமாக போலீசார் அதிகளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அறிவிப்பை திரும்பப் பெறுக: முத்தரசன் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 30

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 26.07.2024ல் வெளியிட்டுள்ள அறிவிப்பில் பல்வேறு பணிகளுக்கான விண்ணப்பத்தை கோரியுள்ளது. அதில் குறிப்பாக தொல்லியல் துறை தேர்விற்கும், புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகம் பணிகளுக்கும் சமஸ்கிருத பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருப்பது மிகுந்த வியப்பளிக்கின்றது.

சமஸ்கிருத பாடம் தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகள் எதிலும் இல்லாத நிலையில், சமஸ்கிருத பட்டம் எவ்வாறு பெற முடியும்? அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லாமல், தேர்வாணையம் தன்னிச்சையாக முடிவு செய்துள்ளதாக தெரிகின்றது. அரசு தலையிட்டு, உடனடியாக தேர்வாணைய அறிவிப்பை ரத்து செய்து மறு அறிவிப்பு வெளியிட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு, மாநில செயற்குழு சார்பில் வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தொடக்கக் கல்வி ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்: அண்ணாமலை வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 30

தமிழக பள்ளிக் கல்வித் துறையில் கடந்த 60 ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையை மாற்றும் வகையிலும் தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கான முன்னுரிமை மற்றும் பதவி உயர்வை பாதிக்கும் வகையிலும் பள்ளிக் கல்வித்துறை சார்பாக வெளியிடப்பட்ட அரசாணை எண் 243ஐ திரும்பப் பெற வேண்டும் என்று தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அதேபோல, பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், ஊதியமுரண்பாடுகளைக் களைய வேண்டும், தற்காலிக ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் உள்ளிட்ட 31 கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர். இதற்கிடையே கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி இன்று (ஜூலை 29) முதல் ஜூலை 31 வரை 3 நாட்கள், சென்னை டி.பி.ஐ. பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம் முற்றுகையிடப்பட்டு, மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவான டிட்டோஜேக் அறிவித்தது.

இதன்படி இன்று காலை போராட்டத்தில் ஈடுபட முயன்ற தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், ஆசிரியர்கள் கைதுக்கு தமிழக பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சென்னையில் இன்று, தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில், பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்துதல், இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்களைச் சரி செய்தல், அரசாணை 243ஐ கைவிடுதல், ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்குதல், ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு அனுமதி உள்ளிட்ட 31 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, அமைதியான முறையில் போராட்டம் நடத்திய ஆசிரியப் பெருமக்கள் கைது செய்யப்பட்டுள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது.

திமுக தனது தேர்தல் வாக்குறுதி எண் 309, 311 ஆகியவற்றில், ஆசிரியர்களுக்குப்பழைய ஓய்வூதியத் திட்டம் கொண்டு வரப்படும் என்றும், இடை நிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடு களையப்படும் என்றும் வாக்குறுதி கொடுத்திருந்தது. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்தும், ஆண்டுதோறும் ஆசிரியப் பெருமக்கள் போராட்டம்தான் தொடர்கிறதே தவிர, அவர்களுக்கான தீர்வுஎட்டப்படவில்லை.

மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வரும் திமுக அரசை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாகநிறைவேற்ற வேண்டும் என்றும் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன் என பதிவிட்டுள்ளார்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: ரவுடி சம்போ செந்திலின் கூட்டாளி வெளிநாடு தப்பியோட்டம்





சென்னை, ஜூலை 30

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கடந்த 5ம் தேதி படுகொலை செய்யப்பட்டார். ரவுடி ஆற்காடு சுரேஷ் கொலைக்கு பழிக்கு பழி வாங்குவதற்கு அவரது ஆதரவாளர்கள் ஆம்ஸ்ட்ராங்கை தீர்த்துக்கட்டியதாக போலீசாரின் முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

இதையொட்டி ஆற்காடு சுரேஷின் சகோதரர் பொன்னை பாலு உள்பட 17 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் திருவேங்கடம் என்ற ரவுடி போலீசாரின் என்கவுண்டருக்கு பலியானார். கைதானவர்களில் அருள், மலர்கொடி, ஹரிஹரன், ஹரிதரன், சிவா ஆகியோர் வக்கீல்கள் ஆவார்கள்.

இந்த கொலை வழக்கில் இன்னும் குற்றவாளிகள் முழுமையாக கைது செய்யப்படவில்லை. தொடர்ந்து போலீசாரின் கைது வேட்டை நீடித்த வண்ணம் உள்ளது. இந்த வழக்கில் தினம், தினம் திடுக்கிடும் தகவல்களும் வெளியாகி வருகிறது. இந்த வழக்கில் திரைமறைவில் இருந்து செயலாற்றியதாக பிரபல ரவுடிகள் சம்போ செந்தில், சீசிங் ராஜா ஆகியோரை போலீசார் தொடர்ந்து தேடி வருகிறார்கள். ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் இதுவரை 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில், போலீசாரால் தேடப்பட்டுவரும் ரவுடி சம்போ செந்திலின் கூட்டாளி கிருஷ்ணன் வெளிநாட்டிற்கு தப்பியோடியதாக தகவல் வெளியாகி உள்ளது. சம்போ செந்திலின் கூட்டாளியான கிருஷ்ணன், ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதான வக்கீல் ஹரிஹரன் மற்றும் சிவாவுடன் நெருக்கமாக இருந்தவர்.

கொலை வழக்கில் ஹரிஹரன் கைது செய்யப்பட்டதும், கிருஷ்ணன், சிவா உட்பட 3 பேர் காரில் திருச்செந்தூர் சென்றுள்ளனர்.

பிறகு அங்கிருந்து மதுரை சென்ற கிருஷ்ணன், தனது காரை சிவாவிடம் கொடுத்துவிட்டு சென்னைக்கு செல்ல அறிவுறுத்தியுள்ளார். சென்னைக்கு வந்த சிவாவை போலீசார் கைது செய்தனர். இந்த நிலையில் கிருஷ்ணன் குடும்பத்துடன் டெல்லியில் இருந்து விமானம் மூலம் தாய்லாந்து தப்பிச் சென்றதாக தகவல் வெளியாகி உள்ளது.

# தேனி அல்லிநகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 169 மாணவ, மாணவியர்களுக்கு இலவச சீருடைகள்: கலெக்டர் வழங்கினார்



தேனி, ஜூலை 30

தேனி மாவட்டம், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் தேனிஅல்லிநகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 113 மாணவர்கள் மற்றும் 56 மாணவிகள் என மொத்தம் 169 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 4 இணை சீருடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, வழங்கினார்.

சமூக நலத்துறையின் சார்பில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சத்துணவு திட்டத்தின்கீழ் பயன்பெறும் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா சீருடைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்துறையின் கீழ், செயல்படும் மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் ஆண்டுதோறும் பள்ளிகளுக்கு நேரில் சென்று மாணவ, மாணவிகளுக்கு அளவு எடுத்து, நான்கு இணை சீருடைகள் (4 செட்) தைத்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி தேனி மாவட்டத்தில் உள்ள 763 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் பயிலும் 56,798 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா நான்கு இணை சீருடைகள் இன்று முதல், வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது,

பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கிடையே எவ்வித ஏற்றத் தாழ்வுமின்றி சமத்துவம் வளர வேண்டும் என்பதற்காகவே அனைத்து மாணவர்களுக்கு ஒரே மாதிரியான சீருடைகள் வழங்கப்படுகிறது. பள்ளி மாணவர்கள் தாங்கள் பயிலும் வகுப்பறையையும், பள்ளியையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், நெகழி பயன்பாட்டை தவிர்க்க வேண்டும். மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து குப்பைத் தொட்டியில் போடுவதன் மூலம் அதனை மறுசுழற்சி செய்து பயன்படுத்தலாம். பள்ளி படிப்பை நிறைவு செய்த மாணவ, மாணவியர்கள் கட்டாயம் தங்களுக்கு பிடித்த பாடப்பிரிவில் உயர் கல்வி பயில வேண்டும். இதன்மூலமே மாணவர்கள் உயர் நிலையை அடைய முடியும்.

மேலும், நண்பர்கள், உறவினர்கள், பெற்றோர்கள் தொடுவதில் உள்ள வேறுபாடுகள் (Good Touch, Bad Touch), குறித்து மாணவிகள் தெரிந்து கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாது அவர்களின் நண்பர்களும் 1098 என்ற குழந்தைகள் பாதுகாப்பு எண்ணிற்கு தொடர்புகொண்டு புகார் தெரிவிக்கலாம். புகார் தெரிவிப்பவர்களின் விவரம் பாதுகாக்கப்படும். மாணவர்கள்மகிழ்ச்சியுடன் கல்வியை கற்று வாழ்வில் வளம் பெற வேண்டும் என்று மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாழ்த்துகள் கூறினார். இந்நிகழ்ச்சியில் தேனிஅல்லிநகரம் நகர் மன்றதலைவர் ரேணுபிரியா பாலமுருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் இந்திராணி, மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளாதேவி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சவுக்கு சங்கரை ஒருநாள் போலீஸ் காவலில் விசாரிக்க கோர்ட்டு அனுமதி



சென்னை, ஜூலை 30

பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர், பெண் போலீசாரை பற்றி அவதூறாக பேசியதாக குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டார். மேலும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அளிக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் சவுக்கு சங்கர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்து வருகிறார்.


இந்த சூழலில் உதகை அருகே புதுமந்து காவல் நிலைய ஆய்வாளர் அல்லி ராணி என்பவர் அளித்த புகாரில் சவுக்கு சங்கர் மீது, உதகை சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கில் அவர் உதகையில் உள்ள நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நீதிபதி தமிழ் இனியன் முன் இன்று ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது சவுக்கு சங்கர் தரப்பு வழக்கறிஞர்கள் மனுதாக்கல் செய்தனர். அதில் சைபர் கிரைம் போலீசார் கைது செய்ததை ரத்து செய்ய கோரிக்கை விடுக்கப்பட்டது. சவுக்கு சங்கர் தரப்பில் வைத்த கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்.

சவுக்கு சங்கரை விசாரிக்க வேண்டியிருப்பதால் 5 நாட்கள் போலீஸ் காவல் வேண்டும் என அரசு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, ஒரு நாள் மட்டும் போலீஸ் காவலில் வைத்து விசாரணை நடத்த அனுமதியளித்து உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து, போலீசார் சவுக்கு சங்கரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

# கடலூர்: பயிற்சியின்போது ஈட்டி தலையில் பாய்ந்து மாணவன் மூளைச்சாவு



கடலூர், ஜூலை 30

கடலூர் மாவட்டம் வடலூர் பார்வதிபுரம் பகுதியைச் சேர்ந்த கிஷோர் என்ற 15 வயது மாணவன் வடலூரில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார். கடந்த 24ம் தேதி கிஷோர் வழக்கம்போல் பள்ளிக்கு சென்றுள்ளார். பள்ளி முடிந்ததும் மாலையில் பள்ளியில் உள்ள விளையாட்டு திடலில் கிஷோர் வட்டு எறியும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது அதே திடலில் மறு முனையில் ஈட்டி எறியும் பயிற்சி நடைபெற்றுள்ளது. மாணவன்கிஷோர்எறிந்த வட்டை எடுக்க சென்ற நேரத்தில் மற்றொரு மாணவர் ஈட்டியை வீச அந்த ஈட்டி கிஷோரின் தலையில் பாய்ந்தது. இதையடுத்து கிஷோருக்கு உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர் புதுச்சேரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், மாணவன் அங்கிருந்து சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கும் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று இரவு மாணவன் அங்கிருந்து விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு மாணவன் மூளைச்சாவு அடைந்து விட்டதாக அங்குள்ள மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக மாணவன் உயிர்பிழைக்க மாட்டார்என்றும்மூளைச்சாவு அடைந்து விட்டதால் அவர் கோமா நிலையில் இருப்பார் என்றும் தெரிவித்தனர். இதைக் கேட்ட அவரது குடும்பத்தினர் அதிர்ச்சிக்குள்ளாகினர். இதனை அறிந்த மாணவனின் தாய் உடனடியாக விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றார். அவர் வடலூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது கடலூர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

மாணவனின் இந்நிலைக்கு பள்ளி நிர்வாகமே காரணம் என பெற்றோர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். சிறிய திடல் உள்ள பள்ளியில் ஈட்டி எறிதல் மற்றும் வட்டு எறிதல் பயிற்சிகளை ஒரே இடத்தில் நடத்துவது தவறு. இதன் காரணமாகவே மாணவன் கோமா நிலைக்கு சென்றுள்ளார் என்று வடலூர் காவல் நிலையத்தில் மாணவனின் பெற்றோர் புகார் அளித்துள்ளனர். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணைநடத்தி வருகின்றனர். மாணவனின் உடல் உறுப்புகளை தானம் செய்யும் பணியில் அவரது உறவினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# 50 ஆண்டுகால வடகாடு பட்டி மக்களின் கனவு நிறைவு வனத்துறை அமைச்சரால் நல்ல முடிவு ஏற்பு



சோழவந்தான் ஜூலை 30

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே வாடிப்பட்டி ஒன்றியம் காடு பட்டி ஊராட்சி உட்பட்ட வடகாடுபட்டி கிராமம் சாலை குண்டும் குழியுமாக உள்ளது இச்சாலை செல்லம்பட்டி ஒன்றியம் விக்கிரமங்கலம் பகுதியில் செல்கிறது மதுரை சோழவந்தான் உசிலம்பட்டி மற்றும் 50 க்கும் மேற்பட்ட பல கிராமங்களுக்கு இச்சாலை தொடர்பு உள்ளதாக இருந்து வருகிறது இச்சாலை வழியாக தினசரி அரசு பஸ்கள் வேன் டூவீலர் கனரக வாகனங்கள் அதிகமாக சென்று வருகிறது வடகாடு பட்டிஇச்சாலை 150 மீட்டர் தூரம் சாலை வனத்துறை கட்டுப்பாட்டில் இருக்கிறது காடு பட்டியலில் இருந்து விக்கிரமங்கலம் பகுதியில் உள்ள சாலைகள் நெடுஞ்சாலைத்துறை மூலமாகவும் உள்ளாட்சித் துறை மூலமாகவும் போடப்பட்டது வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 150 மீட்டர் சாலை 50 ஆண்டு காலமாக தார் சாலையாக அமைக்க வனத்துறை அனுமதி தரவில்லை இதனால் வட காடு பட்டி மக்கள் 50 ஆண்டுக்கு மேலாக வாகன போக்குவரத்திற்காகவும் சாலை வசதி கேட்டு வனத்துறை கண்டித்து பல்வேறு கண்டன ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் உண்ணாவிரதங்கள் இருந்தும் பயனில்லை இது குறித்து சோழவந்தான் எம் எல் ஏ வெங்கடேசன் இப்பகுதி மக்கள் குண்டும் குழியான 150 மீட்டர் சாலையை சீரமைக்க கோரி வனத்துறையின் அராஜகத்தை தெரிவித்தும் கோரிக்கை மனு தந்தனர் எம்எல்ஏ வின்

ஏற்பாட்டில் தமிழக வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் வடகாடு பட்டி சாலையை ஆய்வு செய்தார் அப்பொழுது இப்பகுதி மக்கள் போக்குவரத்திற்கு சாலையைசீரமைக்க மன்றாடி வேண்டினர் அமைச்சருடன் எம் எல் ஏ வெங்கடேசன் கலெக்டர் சங்கீதா கூடுதல் கலெக்டர் மோனிகா ராணா தாசில்தார் ராமச்சந்திரன் வன பாதுகாப்பு அலுவலர் பத்மாவதி மாவட்ட வன அலுவலர் தருண்குமார் வனச்சரக அலுவலர் வெங்கடேசன் யூனியன் கமிஷனர் பொற்செல்வி காடு பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன் ஆகியோரோடு அமைச்சர் ஆலோசனை மேற்கொண்டார் அமைச்சர் சாலை வசதி செய்து தருவதாக உறுதி அளித்தார் 50 ஆண்டுகால சாலை பிரச்சனையை உடனடி தீர்க்க சம்மதம் தெரிவித்த வனத்துறை அமைச்சர் மதிவேந்தனை மக்கள் பாராட்டினர் அமைச்சருடன் எம் எல் ஏ வெங்கடேசன் திமுக ஒன்றிய செயலாளர் பசும்பொன்மாறன் பாலராஜேந்திரன் நகர் செயலாளர் வக்கீல் சத்திய பிரகாஷ் காடுப்பட்டி தலைவர் ஆனந்தன் சோழவந்தான் பேரூராட்சி தலைவர் ஜெயராமன் துணைத் தலைவர் லதா கண்ணன் கவுன்சிலர்கள் கொத்தாலம் செந்தில் குருசாமி முத்துச்செல்வி சதீஷ் விவசாய அணி வக்கீல் முருகன் வாடிப்பட்டி தலைவர் பால்பாண்டி பொதுக்குழு ஸ்ரீதர் இளைஞர் அணி வெற்றிச்செல்வம் மணிவேல் முள்ளி பள்ளம் ஊராட்சித் துணைத் தலைவர் கேபிள் ராஜா ஒன்றிய கவுன்சிலர்கள் கார்த்திகா ஞானசேகரன் சுப்பிரமணியன் பிரதிநிதி பெரியசாமி மற்றும் பலர் இருந்தனர் இதற்கிடையே விக்கிரமங்க லம் மேலகால் மற்றும் உசிலம்பட்டி வனப்பகுதி சாலையை விரிவாக்கம் செய்திட விக்கிரமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் கலியுக நாதன் சமூக ஆர்வலர் கல்புளிச்சான் பட்டி பால்பாண்டி எட்டூர் கமிட்டி நிர்வாகி ஜெயபாலன் மூக்கையா மற்றும் கிராமத்தினர் அமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்தனர் அமைச்சருடன் அரசு அதிகாரிகள் உடன் வந்தனர்

# தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தை ஜீரணிக்க முடியாது: சென்னை ஐகோர்ட்டு கண்டனம்

சென்னை, ஜூலை 30

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த 2018ம் ஆண்டு மே 22ந்தேதி நடந்த போராட்டத்தின்போது காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம், கடந்த 2022ம் ஆண்டு மே 18ந்தேதி தனது அறிக்கையை முதல் அமைச்சரிடம் சமர்ப்பித்தது. அதில், இந்த சம்பவத்துக்கு காரணமான 17 காவல் துறையினர், மாவட்ட கலெக்டர் உள்பட வருவாய் துறையினர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும், துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், இழப்பீட்டை அதிகரித்து வழங்கவும் பரிந்துரைத்திருந்தது.

ஆணையத்தின் அறிக்கையை ஏற்றுக் கொண்ட அரசு, அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மட்டும் எடுப்பது எனவும், ஏற்கெனவே வழங்கப்பட்ட தலா 20 லட்சம் ரூபாய் இழப்பீடே போதுமானது எனவும் கூறி, கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் 17ந்தேதி அரசாணை பிறப்பித்தது. இதனைத்தொடர்ந்து துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு சி.பி.ஐ. மேல் விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த சூழலில் ஸ்டெர்லைட் துப்பாக்கி சூட்டில் தொடர்புடைய அதிகாரிகளின் சொத்துகளை கணக்கிட சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது. மேலும் துப்பாக்கிச்சூடு குறித்த சி.பி.ஐ. விசாரணை சரியில்லை என்றும் இத்தனை ஆண்டுகளாகியும் பலன் இல்லை. ஒருதலைபட்சமாக செயல்பட்டுள்ளது. விசாரணை முடிவு பற்றி எந்த கவலையும் இல்லாமல் விசாரணை நடத்தினால் அறிக்கைநியாயமானதாக இருக்காது என்றும் சென்னை ஐகோர்ட்டு நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர். தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையில், தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக இரண்டு வாரத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய தமிழக லஞ்ச ஒழிப்புத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர்.

இந்நிலையில் இன்று நடந்த வழக்கு விசாரணையின் போது, தூத்துக்குடி சம்பவத்தில் உயிருக்கு பயந்து ஓடிய மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதை ஜீரணிக்க முடியாது என்று சென்னை ஐகோர்ட்டு கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் அதிகாரிகள் தங்கள் சொத்து விவரங்களை தெரிவிக்க வேண்டும். ஆதாரங்களை போலீஸ்விசாரிக்கவேண்டும். லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணைக்கு அரசு செயலாளர், டி.ஜி.பி. ஆகியோர் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு கொடுத்து வழக்கை முடித்து வைப்பது எப்படி நியாயம்..? அனுமதியின்றி தொழிற்சாலை செயல்பட்டது அரசுக்கு தெரிந்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை..? என சென்னை ஐகோர்ட்டு கேள்வி எழுப்பியது.

இதனைத்தொடர்ந்து துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் பணியில் இருந்த காவல்துறை, வருவாய் துறை அதிகாரிகளின் சொத்து விவரங்களை தாக்கல் செய்ய லஞ்சஒழிப்புத்துறை அவகாசம் கேட்ட நிலையில், சொத்து விவரங்கள் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய 3 மாதம் அவகாசம் வழங்கி சென்னை ஐகோர்டு உத்தரவிட்டது.

# குறும்பலாப்பேரியில் ரேசன் கடை புதிய கட்டிடம் கட்ட தாமதம்: பொதுமக்கள் முற்றுகை போராட்டம் நடத்த முடிவு



தென்காசி, ஜுலை 30

தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் குலசேகரப்பட்டி ஊராட்சி குறும்பலாப்பேரி பகுதியில் செயல்பட்டு வந்த ரேஷன்கடைகட்டிடத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இடித்து விட்டு இதுவரை புதிய ரேஷன் கடை கட்டிடம் கட்டி தராததால் பொதுமக்கள் முற்றுகைப் போராட்டம்நடத்தமுடிவு செய்துள்ளனர்.

கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் குலசேகரப்பட்டி ஊராட்சி குறும்பலாப்பேரி பகுதியில் சுமார் 1300 குடும்ப அட்டைகள் உள்ளது. இவர்கள் இதுவரை ரேசன் பொருட்கள் வாங்கி வந்த ரேசன் கடையினை மிகவும் பழுதடைந்து விட்டதாக கூறி அந்த கட்டிடத்தை இடித்தனர்.

அப்போது அதே பகுதியில் உடனடியாக புதிய ரேஷன் கடை கட்டிடம் கட்டப்படும் என்று உறுதி அளித்தனர். ஆனால் இன்று வரை புதிய ரேஷன் கடை கட்டுவதற்கான எந்த பணியும் நடைபெறவில்லை.

தனால் இந்தப் பகுதியில் வாழும் பொதுமக்கள் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தற்காலிக ரேசன் கடைக்கு சென்று பொருட்களை வாங்கி வருகின்றனர்.

இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமம் அடைந்து வருகின்றனர். எனவே உடனடியாக ஏற்கனவே செயல்பட்டு வந்த பகுதியில் புதிய ரேசன் கடை கட்டிடத்தை கட்டி தர வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த பகுதி மக்கள் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் தென்காசி தாலுகா அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பலமுறை தங்களது கோரிக்கைகளை முன் வைத்தனர்

ஆனாலும் இன்று வரை புதிய ரேசன் கடை கட்டும் பணி துவக்கப்படவில்லை. இதனால் குறும்பலாப்பேரி ஊர் பொதுமக்கள் வரும் 02.08.2024 அன்று கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்தப் போவதாக இன்று கிழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய வட்டாரவளர்ச்சி அலுவலரிடம் கோரிக்கை மனு ஒன்றை கொடுத்துள்ளனர்.

# தினந்தோறும் ஏதாவது ஒன்றை கற்றுக் கொள்ளுங்கள் மாணவிகளுக்கு அறிவுரை



வாடிப்பட்டி, ஜூலை. 30

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மதுரைமாவட்டசட்டப்பணி ஆணை குழு உத்தரவுபடி வாடிப்பட்டியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வட்ட சட்டப்பணிக் குழு சார்பாக சட்ட விழிப்புணர்வு முகாம் கருத்தரங்கு நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் திலகவதி தலைமைதாங்கினார். உதவி தலைமை ஆசிரியர் பிரேமா முன்னிலை வகித்தார். கணினி ஆசிரியர் கார்த்திக் வரவேற்றார். பள்ளி நில நன்கொடையாளர் வழக்கறிஞர் செல்வகுமார் தொகுத்து வழங்கினார். இந்த கருத்தரங்கில் வட்டச் சட்ட பணி .குழு வழக்கறிஞர்கள் தயாநிதி, சீனிவாசன், சுமீதா ஆகியோர் பெண்களுக்கான சட்டங்கள், பாதுகாப்பு, விழிப்புணர்வு, தற்காப்பு வழிமுறைகள்பற்றி விளக்கிப் பேசினர். இந்த கருத்தரங்கில் வட்டச் சட்டப்பணிக்குழு தலைவர்நீதிபதி ராம் கிஷோர் பேசிய போது கூறியதாவது: அன்புள்ள மாணவிகளே உங்களுக்கு நீங்கள்தான் போட்டியாளர்கள் உங்களுடன் நீங்களே போட்டி போடுங்கள். இந்த உலகம் மிகப் பெரியது அதில் தினந்தோறும் எதாவது ஒன்றை கற்றுக் கொள்ளுங்கள். எந்த ஒரு செயலையும் திட்டமிட்டு செய்யுங்கள்அப்படி திட்டமிட்டது நடக்கவில்லைஎன்றால்மீண்டும் முயற்சி செய்து செயல்படுங்கள். நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை குறிக்கோளாக கொண்டு செய்ய வேண்டும். தற்போது போட்டி தேர்வு அதிகரித்து வரும் சூழ்நிலையில் 700 காலிப்பணியிடத்திற்கு சுமார் 15 லட்சம் முதல் 20 லட்சம் பேர் தேர்வு எழுதுவார்கள். இதில் வெற்றி பெற்று ஒருவராக வர வேண்டும். அவருக்கு முழு முயற்சியோடு பயிற்சியோடு படிக்க வேண்டும்.நம் வாழ்க்கையில் பலவித கட்டங்கள் உள்ளது அதில் ஒன்றில் மட்டும் நின்று கொள்ளாமல் அடுத்தடுத்தகட்டங்களைநோக்கி நகர்ந்துசென்றுகொண்டே இருக்க வேண்டும்.படிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்துங்கள் அதுவும் குறிப்பாக செய்தித்தாள்களை தினந்தோறும் படிக்கும் பழக்கம் வேண்டும் அதில் நம்மைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகள் அதிகம் இருக்கும். மேலும் அதில் நாட்டில் வீட்டில் ஊரில் உலகில் நடைபெறும் சம்பவங்கள் நிகழ்வுகளை தெரிந்து கொள்ள வேண்டும்.ஒவ்வொன்றும் உங்களுக்கு அனுபவம் தான். அறிவை படித்து கற்றுக் கொள்ளலாம் அனுபவத்தை பெற்ற பின்பு தான் கற்றுக் கொள்ள முடியும். அனுபவம் உள்ளவர்களிடமிருந்து கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் மனதில் பட்டதை சரியா,தவறா என்பதை அனுபவமுள்ள உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் மற்றும் தாய் தந்தையரிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இந்த கூட்டத்தின் முடிவில் கார்கில் போரில் உயிர் நீத்த தியாகிகள் தினயொட்டி ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

முடிவில் உடற்கல்வி ஆசிரியர் :சந்திர மோகன் நன்றி கூறினார். இதன் ஏற்பாடுகளை வட்ட சட்டப்பணிக் குழு சட்டதன்னார் வலர்கள் செய்திருந்தனர்.

# மதுரை தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப்பணித்திட்டம்,தேசிய கப்பற்படை, தரைப்படை இயக்கங்கள் சார்பாக கார்கில் போர் நினைவு தினம் அனுசரிப்பு



மதுரை, ஜூலை.30

மதுரைதூய மரியன்னை மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப்பணித்திட்டம்,தேசிய கப்பற்படை ,தரைப்படை இயக்கங்கள் சார்பாக கார்கில் போர் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் அருட்தந்தை ஸ்டீபன் லூர்து பிரகாசம் தலைமை தாங்கி கார்கில் போர் மற்றும் நாட்டுப்பற்றுக்குறித்தும் சிறப்புரை யாற்றி வீர மரணம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தினார். இதில் மாணவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி உறுதி மொழி ஏற்றனர். மதுரை மாவட்ட அளவில் பள்ளிகளுக்கு கார்கில் நினைவு தின ஓவியப் போட்டி நடந்தது .

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மரக்கன்று நடு விழாவில் நாட்டு நலப்பணித்திட்ட திட்ட அலுவலர் முனைவர் ஞா.சந்திரன், தேசிய கப்பற்படை இயக்கப்பொறுப்பாளர் நிர்மலின் பவுல்ராஜ், தரைப்படை இயக்கப் பொறுப்பாளர் நிர்மல் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுடன் மரக்கன்று செய்தனர்.





இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் லிமிடெட் காரைக்குடி மண்டலம் மூலம் பிஎஸ்6 ரக 07 புதிய பேருந்துகளை அமைச்சர் ராஜகண்ணப்பன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




## 'டெட்பூல் & வோல்வரின்' பாக்ஸ் ஆபிஸ் வசூல், அதற்குள் இத்தனை கோடியா?

'டெட்பூல் & வோல்வரின்' படம் உலகளவில் வெளியாகி, 3 நாட்களில் வசூலில் சாதனை படைத்துள்ளது.

மார்வெல் படங்களுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். குறிப்பாக, அவெஞ்சர்ஸ் படம் அனைவருக்கும் பிடித்த படமாக உள்ளது. அதில் வரும் ஹீரோக்களுக்கும் உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். அயர்ன் மேன், ஹல்க், தோர், ஸ்பைடர் மேன், கேப்டன் அமெரிக்கா, நடாசா உள்ளிட்ட கதாபாத்திரங்களுக்கு இணையாக வோல்வரின் மற்றும் டெட்பூல் கதாபாத்திரங்களுக்கும் ரசிகர்கள் உள்ளனர். தற்போது, வோல்வரின் மற்றும் டெட்பூல் பாத்திரங்களை ஒன்றிணைத்து 'டெட்பூல் & வோல்வரின்' என்ற படம் உருவாகியுள்ளது. இது இதற்கு முன்னதாக வந்த டெட்பூல் மற்றும் டெட்பூல் 2 ஆகிய படங்களின் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படம் கடந்த 26ந் தேதி இந்தியாவில் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் வெளியானது. ரசிகர்களை இப்படம் வெகுவாக கவர்ந்து வசூலை அள்ளியுள்ளது. அதன்படி, இப்படம் இந்த வார இறுதியில் ரூ.83.28 கோடி வசூலித்துள்ளது. இந்தநிலையில், 'டெட்பூல் & வோல்வரின்' பாக்ஸ் ஆபிஸில் சாதனை செய்துள்ளது. ரியான் ரெனால்ட் மற்றும் ஹக் ஜேக்மேன் நடித்துள்ள இப்படம், முதல் வாரத்தின் இறுதியில் ரூ.3650 கோடி வசூல் செய்து பாக்ஸ் ஆபிஸில் புயலை கிளப்பியுள்ளது. இது 2024ம் ஆண்டில் வெளியான படங்களில் ஆரம்பத்திலேயே அதிக வசூலை பெற்ற படம் என்ற பெருமையை பெற்றுள்ளது.



## செம்பருத்தி டீ சர்ச்சையில் சிக்கிய நயன்தாரா

சமீபத்தில் நடிகை நயன்தாரா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில்தான் தொடர்ச்சியாக செம்பருத்தி டீ குடித்து வருவதாகவும் தனது ரசிகர்களையும் செம்பருத்தி டீ குடிப்பதை பரிந்துரைத்திருந்தார். சர்க்கரை நோய் , உயர் ரத்த அழுத்தம் போன்றவற்றுக்கு செம்பருத்தி டீ நல்லது என்றும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது என்று நயன்தாரா தெரிவித்திருந்தார். இந்த டிப்ஸை தனக்கு தனது ஊட்டச் சத்து நிபுணரான முன்முன் கனேரிவால் பரிந்துரைத்ததாக அவரை பாராட்டியிருந்தார். நயன்தாராவின் இந்த பதிவை விமர்சித்து டாக்டர் பிலிப்ஸ் தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில் "செம்பருத்தி டீ குடிப்பதற்கு ருசியானது என்பதோடு நயன்தாரா நிறுத்தியிருந்தால் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் அதோடு நிற்காமல் செம்பருத்தி டீயின் மருத்துவ குணத்தைப் பற்றி பேசி தனது அறிவின்மையை வெளிப்படுத்தி இருக்கிறார். செம்பருத்தியின் மருத்துவ குணங்கள் என்று நயன்தாரா குறிப்பிட்டவை எதுவுமே நிரூபிக்கப்படாத உண்மைகளே. இந்த பதிவு அவரது ஊட்டச்சத்து நிபுணரை ப்ரோமோட் செய்யும் நோக்கத்திற்காகவே அவர் இந்த பதிவை பதிவிட்டுள்ளார். செம்பருத்தி டீயை தினமும் குடிப்பதால் ஆண் மற்றும் பெண்களுக்கு நிறைய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. நடிகை நயன்தாரா ஆயுர்வேத மருத்துவ முறையே வாழ்க்கையை வழிநடத்திச் செல்லும் என்கிற புரிதலில் பல்வேறு போலியான தகவல்களை பகிர்ந்துள்ளார்" என்று அவர் தெரிவித்துள்ளார். அவரது இந்த பதிவைத் தொடர்ந்து நயன்தாரா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இருந்து தனது பதிவை நீக்கியுள்ளார். மேலும் டாக்டர் பிலிப்ஸ் கூறுகையில் பதிவு நீக்கப்பட்டு உள்ளது மன்னிப்பு கேட்கவில்ல. பிரபலங்களின் இத்தகைய நடத்தையை தடுக்க சட்டங்கள் தேவை என பதிவிட்டுள்ளார்.

## நவம்பர் 1ம் தேதி முதல் படப்பிடிப்புகள் நிறுத்தம் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம்

தமிழ் சினிமாவில் இப்போது இருக்கக்கூடிய ஒரு மோசமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு அனைத்து கழகங்களும் சேர்ந்த கூட்டமானது இன்று சென்னையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தயாரிப்பாளர் சங்கம், நடிகர்கள் சங்கம், விநியோகஸ்தர்கள் சங்கம் உட்பட பல்வேறு சங்கங்கள் பங்கேற்றனர்.

இந்நிலையில் இந்த கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில் நவம்பர் 1 ஆம் தேதி முதல் படப்பிடிப்புகளை நிறுத்துவது என்றும் . நடிகர் , நடிகைகளின் சம்பளம் குறித்து முடிவெடுக்கும் வரை படப்பிடிப்புகளை நிறுத்த முடிவு.

முன்னணி நடிகர்களின் படங்கள் வெளியாகி 8 வாரங்களுக்கு பிறகே ஓடிடியில் ரிலீஸ் செய்ய வேண்டும். நவம்பர் 1 முதல் படப்பிடிப்புகளை நிறுத்துவது என்றும், நடிகர், நடிகைகளின் சம்பளத்தை கட்டுப்படுத்த புதிய வழிமுறைகளை உருவாக்க திட்டம் எடுக்க பட உள்ளதாக கூறியுள்ளனர்.

ஆகஸ்ட் 16 முதல் புதிய படத்திற்கு பூஜை போடக்கூடாது என தயாரிப்பாளர் சங்கம் முடிவெடுத்துள்ளனர். பல திரைப்படங்கள் திரையரங்குகள் கிடைக்காமல் தேங்கியுள்ளதால் புதிய படத்திற்கு பூஜை போடக்கூடாது என்ற முடிவைஎடுத்துள்ளனர். இதனால்தமிழ்சினிமாதுறையில்சிலமாற்றங்களும்,நடிகர்கள்மற்றும்டெக்னிஷியங்களின் ஊதியம் கட்டுக்குள் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டிமான்ட்டி காலனி 2 படத்திற்கு யு/ஏ சான்றிதழ்




அருள்நிதி தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவராக வலம் வருபவர். இவர் வம்சம், மௌனகுரு, இரவுக்கு ஆயிரம் கண்கள், டைரி, கழுவேத்தி மூர்க்கன் என பல படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். இதற்கிடையில் கடந்த 2015ம் ஆண்டு அருள்நிதி, டிமான்ட்டி காலனி எனும் திரைப்படத்தில் நடித்திருந்தார். இந்த படத்தை அஜய் ஞானமுத்து இயக்கியிருந்தார். ஹாரர் திரில்லர் கதை களத்தில் வெளியான இந்த படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. அதைத்தொடர்ந்து கிட்டத்தட்ட எட்டு வருடங்கள் கழித்து 'டிமான்ட்டி காலனி ' படத்தின் இரண்டாம் பாகம் உருவாகி இருக்கிறது. அஜய் ஞானமுத்து இயக்கியுள்ள இந்த படத்திற்கு 'டிமான்ட்டி காலனி 2' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதில் அருள்நிதி தவிர பிரியா பவானி சங்கர், அருண்பாண்டியன், விஜே அர்ச்சனா, மீனாட்சி கோவிந்தராஜன், முத்துக்குமார் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பிடிஜியுனிவர்சல்நிறுவனம்இந்தபடத்தைதயாரித்துள்ள நிலையில் ஹரிஷ் கண்ணன் இதன் ஒளிப்பதிவு பணிகளை கவனித்திருக்கிறார். சாம் சி எஸ் படத்திற்கு இசையமைத்துள்ளார். அதைத்தொடர்ந்து மிரட்டலான டிரெய்லரும் வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை எக்கச்சக்கமாகஅதிகப்படுத்தியது. எனவே ரசிகர்கள்பலரும்படமானது எப்போது ரிலீஸ் ஆகும் என்ற எதிர்பார்ப்பில் இருந்து வருகின்றனர். இந்நிலையில் இந்த படத்தினை தமிழ்நாட்டில் ரிலீஸ் செய்யும் உரிமையை ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் கைப்பற்றியுள்ளது. இந்த படம் ஆகஸ்ட் 15ம் தேதி வெளியாகவுள்ளது. படத்தின் டிரைலர் மற்றும் பர்ஸ்ட் லுக் அண்மையில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இப்பொழுது இந்த படத்திற்கு தணிக்கை குழு யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளது. இதனால் இப்படத்தை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை காணலாம். படத்தின் நேர அளவு 2 மணி நேரம் 24 நிமிடங்களாக இடம்பெற்றுள்ளது.

## கோட் படம் குறித்து அப்டேட் கொடுத்த தயாரிப்பாளர்!




நடிகர் விஜய், வெங்கட் பிரபு இயக்கும் 'தி கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்' (கோட்) படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தில் பிரசாந்த், மோகன், பிரபுதேவா, ஜெயராம், கணேஷ், யோகிபாபு, அஜ்மல் அமீர், சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். ஏஜிஎஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இந்த படத்தில் விஜய் இரண்டு வேடங்களில் நடிக்கிறார்.

இந்த திரைப்படம் வரும் செப்டம்பர் 5ம் தேதி திரையரங்குகளில் ரிலீசாக உள்ளது. இதற்கிடையே, அண்மையில், 'கோட்' திரைப்படத்தின் இரண்டு பாடல்கள் வெளியாகி கலவையான விமர்சனத்தை பெற்றது.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து, தற்போது முழுவீச்சில் கிராபிக்ஸ் பணிகள் உள்பட தொழில்நுட்ப பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனிடையே எக்ஸ் தளத்தில், "இந்த ஆண்டின் அதிகம் எதிர்பார்க்கப்படும் பெரிய திரைப்படம் விஎப்எக்ஸ் பணிகள் முழுமை பெறாததால், ரிலீஸ் தள்ளி போக வாய்ப்புள்ளது ," என்ற தகவல் வெளியானது. இந்த பதிவிற்கு தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, இரண்டு முறை பதில் அளித்தார்.

இந்த பதிவு 'கோட்' திரைப்படத்தை மறைமுகமாக கூறியதாக புரிந்து கொண்ட அர்ச்சனா கல்பாத்தி 'கண்டிப்பாக இந்த தகவல் உண்மை அல்ல, நாங்கள் 24 மணி நேரமும் இந்த படத்தின் பணிகளை செய்து வருகிறோம், எனவே தயவு செய்து நெகட்டிவ் மற்றும் பொய் செய்திகளை பரப்ப வேண்டாம்' என்று தெரிவித்துள்ளார்.

அதன்பிறகுஅவர்மீண்டும்இந்தபதிவில்'கோட்'படம்எனகுறிப்பிடவில்லை,அதைநான்கவனிக்கவில்லை, மன்னிக்கவும். ஆனால் அதே நேரத்தில் நாங்கள் செப்டம்பர் 5ம் தேதி உலகம் முழுவதும் படத்தை ரிலீஸ் செய்வோம்' என்று தெரிவித்துள்ளார்.

இவரது இந்த பதிவுக்கு பதில் அளித்த எக்ஸ் தள பயனர் ஒருவர் அடுத்த அப்டேட் எப்போது வெளியாகும் என கேட்டார். அதற்கு பதில் அளித்த அர்ச்சனா கல்பாத்தி "ஆகஸ்ட் 1ம் தேதி முதல்," என பதில் அளித்துள்ளார். அர்ச்சனா கல்பாத்தியின் இந்த பதிவு தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## நாங்கள் சிங்கங்கள்...அதனாலேயே ஹர்பஜனுக்கு சவால் விடுத்த பாக். முன்னாள் வீரர்



2025ம் ஆண்டு சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெற உள்ளது. இந்த சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து உள்ளிட்ட 8 அணிகள் கலந்து கொள்ள உள்ளன. ஆனால் இந்த தொடருக்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்லுமா? என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. இந்திய அணி ஆசிய கிரிக்கெட் மற்றும் ஐ.சி.சி தொடர்களில் மட்டுமே பாகிஸ்தானுடன் மோதி வருகிறது.

இந்நிலையில் 2025ம் ஆண்டு சாம்பியன்ஸ் டிராபி தொடரை துபாய் அல்லது இலங்கைக்கு மாற்றுமாறு சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு (ஐ.சி.சி) பி.சி.சி.ஐ கோரிக்கை வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால் இது குறித்து ஐ.சி.சி இன்னும் முடிவு செய்யவில்லை. இந்நிலையில் பாகிஸ்தானில் நடைபெறும் சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கு இந்திய அணி வரவேண்டும் என பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் இது தொடர்பாக சில தினங்களுக்கு முன்பு பேசி இருந்த ஹர்பஜன் சிங் பாகிஸ்தான் நாட்டில் பாதுகாப்பு நிலையற்றதாக இருக்கிறது என்றும், அங்கு தினந்தோறும் ஏதாவது நடைபெறுகிறது என்றும், எனவே வீரர்களின் நலனை விட பெரிது எதுவும் கிடையாது, இந்திய கிரிக்கெட் வாரியம் பாகிஸ்தான் சென்று விளையாட மறுப்பதை ஆதரிப்பதாகக் கூறியிருந்தார்.

இந்நிலையில் ஹர்பஜன் சிங் கூறிய கருத்துக்கு சவால் விடுக்கும் விதமாக பாகிஸ்தான் முன்னாள் வீரர் தன்வீர் அகமத் தனது கருத்தை கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, நாங்கள் சிங்கங்கள். நாங்கள் உங்கள் நாட்டுக்கு வந்து கிரிக்கெட் விளையாடினோம். அதே போல நீங்களும் இங்கே வந்து விளையாடுங்கள். எங்கள் நாட்டுக்கு வந்து விளையாட உங்களை வரவேற்கிறோம். நாங்கள் உங்களுக்கு போதுமான பாதுகாப்பு உட்பட அனைத்தையும் கொடுப்போம்.

எங்கள் நாட்டுக்கு வாருங்கள். இருப்பினும் இதைப் பாகிஸ்தான் வீரர்கள் மட்டுமே தொடர்ந்து செய்து வருகின்றனர். பாகிஸ்தான் வீரர்கள் மட்டுமே வெற்றி தோல்வியை பார்க்காமல் எப்படி விளையாடுகிறோம் என்பதை சிந்திக்காமல் அனைத்து இடங்களுக்கும் சென்று விளையாடுகின்றனர். பாகிஸ்தான் ஒவ்வொரு முறையும் இந்தியா சென்று விளையாடி திரும்பி வருகிறார்கள். இதைத் தான் நீங்கள் தைரியமான அணி, தைரியமான வீரர்கள் என்று சொல்வீர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## ஒருநாள் கிரிக்கெட் அணியில் இடம் பெற பாண்ட்யா இதை செய்ய வேண்டும் ரவிசாஸ்திரி கருத்து

இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் டி20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இரு டி20 ஆட்டங்களின் முடிவில் இந்தியா 20 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டி20 போட்டி நாளை நடைபெறுகிறது.

இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய டி20 அணியில் இடம் பிடித்துள்ள பாண்ட்யா ஒருநாள் தொடருக்கான அணியில் இடம் பெறவில்லை. இந்நிலையில் பிட்டாக இல்லாத காரணத்தால் பாண்ட்யா ஒருநாள் கிரிக்கெட்டில் 10 ஓவர்கள் முழுமையாக வீசுவதில்லை என்றும், எனவே அவர் பிட்டாகி 10 ஓவர்கள் முழுமையாக வீசினால் தேர்வுக்குழு அவரை ஒருநாள் அணியில் தேர்ந்தெடுக்கும் என்றும் இந்திய முன்னாள் வீரர் ரவிசாஸ்திரி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, பாண்ட்யா தொடர்ந்து விளையாடுவது மிகவும் முக்கியம். மேட்ச் பிட்னஸ் மிகவும் முக்கியம் என்று நான் நம்புவேன். எனவே சர்வதேச டி20 கிரிக்கெட்டில் அவர் முடிந்தளவுக்கு தொடர்ந்து விளையாட வேண்டும். நாம் வலுவாக பிட்டாக இருக்கிறோம் என்று நினைத்தால் பாண்ட்யா ஒருநாள் கிரிக்கெட்டுக்கு திரும்பலாம்.

ஆனால் அதற்கு பவுலிங் முக்கியமாகும். 10 ஓவர்கள் வீச வேண்டிய ஒருநாள் கிரிக்கெட்டில் நீங்கள் மூன்று ஓவர்கள் மட்டும் வீசினால் அது அணியின் சமநிலையை பாதிக்கும். பாண்ட்யா ஒருநாள் கிரிக்கெட் அணியில் இடம் பெற 8 10 ஓவர்கள் வீசி தம்முடைய வழியில் பேட்டிங் செய்ய வேண்டும். எனவே இவை அனைத்தும் ஹர்திக் பாண்ட்யாவின் பயணத்தில் உள்ளது.

ஏனெனில் அவருக்குத்தான் மற்றவர்களை விட தம்முடைய உடலைப் பற்றி நன்றாக தெரியும். மேலும் இந்தியாவுக்கு டி20 உலகக் கோப்பையில் சிறப்பாக விளையாடி வெற்றியில் பங்காற்றிய விதம் அவருக்கு உத்வேகத்தை கொடுக்கும். எனவே மீண்டும் பிட்டாகி மேலே வர அவருக்கு எந்த உத்வேகமும் தேவையில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## அஸ்வினையே மன்கட் செய்து விடுவேன் என எச்சரித்த நெல்லை அணியின் பவுலர்... வீடியோ வைரல்



நடப்பு டி.என்.பி.எல். தொடரின் கடைசி லீக் ஆட்டத்தில் அஸ்வின் தலைமையிலான திண்டுக்கல் டிராகன்ஸ் அணி, நெல்லை ராயல் கிங்ஸ் அணியை எதிர்கொண்டது. அதில் திண்டுக்கல் நிர்ணயித்த 137 ரன் இலக்கை நெல்லை அணி 17.5 ஓவர்களில் விரட்டிப்பிடித்தது. அருண் கார்த்திக் 45 ரன்னும், அஜிதேஷ் 43 ரன்னும் எடுத்தனர். ஏற்கனவே அடுத்த சுற்று வாய்ப்பை இழந்துவிட்ட நெல்லைக்கு இது ஆறுதல் வெற்றியாகவே அமைந்தது.

முன்னதாக இப்போட்டியில் திண்டுக்கல் அணி முதலில் பேட்டிங் செய்தபோது ரவிச்சந்திரன் அஸ்வின் 15வது ஓவரில் எதிர்புறம் (நான் ஸ்டரைக்) இருந்தார். அந்த ஓவரை வீசிய நெல்லையின் மோகன் பிரசாந்த் ஒரு பந்தில் பந்து வீசுவதை நிறுத்தி விட்டு ரவிச்சந்திரன் அஸ்வின் வெள்ளைக்கோட்டை விட்டு வெளியேற முயற்சித்ததற்காக மன்கட் செய்து விடுவேன் என்று எச்சரித்தார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. ரசிகர்கள் பலரும் கிண்டலடித்து வருகின்றனர்.

ஏனெனில் 2019 ஐபிஎல் தொடரில் ஜோஸ் பட்லரை மன்கட் முறையில் அவுட்டாக்கிய அஸ்வினின் செயல் கிரிக்கெட் ரசிகர்களிடையே பேசு பொருளானது. ஆனால் விதிமுறைக்கு உட்பட்டே செயல்பட்டதாக தெரிவித்த அவர் அனைவரும் மன்கட் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். அப்படிப்பட்ட அஸ்வினையே இப்போட்டியில் மன்கட் செய்து விடுவேன் என்று தமிழக வீரர் பிரசாந்த் எச்சரித்தது வைரலாகி வருகிறது.



நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

**விளக்கம்:**

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறக்குக் கொடுப்பதே சிறந்தது.




நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.